

பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 48

23.07.2026

சார்பு ஆய்வாளருக்கு லஞ்ச வழக்கில் 2 ஆண்டுகள் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

கடந்த 2009ம் வருடம் அக்டோபர் மாதத்தில், கோயம்புத்தூர் மாவட்டத்தை சேர்ந்த புகார்தாரர் திரு.ஆறுமுகம், வாகன விபத்தில் சம்பந்தப்பட்ட தனது இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்புவதற்கும் மற்றும் புகார்தாரரை பிணையில் விடுவிப்பதற்கும் திருமதி.ராஜாத்தி, காவல் சார்பு ஆய்வாளர், மனப்பாறை காவல் நிலையம், திருச்சி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.1,500/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 29.10.2009 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திருமதி.ராஜாத்தி, காவல் சார்பு ஆய்வாளர் லஞ்சபணம் ரூ.1,500/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது ஊழல் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், திருச்சி மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு இன்று 23.07.2026ந் - தேதி திருமதி.ராஜாத்தி, அப்போதைய காவல் சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும் மற்றும் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

PRESS RELEASE – 48
23.07.2026

SUB-INSPECTOR OF POLICE CONVICTED IN BRIBE CASE

In October 2009, the complainant Tr.Arumugam of Coimbatore district, gave complaint on Tmt. Rajathi, Sub-Inspector of Police, Manapparai Police Station, Trichy district that she demanded Rs.1,500/- as bribe from the complainant for releasing the complainant Arumugam on Bail and for sending his motor cycle for Motor Vehicle Inspector's inspection, in an accident case registered against him. In this connection, a trap was organized by the Trichy detachment. On 29.10.2009 during trap Tmt.Rajathi, Formerly Sub-Inspector of Police, received the bribe amount from the complainant and was arrested. On completion of investigation, the case was charge sheeted against the accused before the Special Court for PC Act cases, Trichy. Today (23.07.2026), Judgment was pronounced in this case and the accused Tmt. Rajathi was convicted to undergo Rigorous Imprisonment for 2 years and to pay a fine of Rs.10,000/-.